TNMD010062202025



**நான்காவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மதுரை.**

முன்னிலை திரு.S.ஜான் சுந்தர்லால் சுரேஷ், B.Sc.,M.L.,

நான்காவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

மதுரை.

2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் சனிக்கிழமை

அமர்வு வழக்கு எண்.610/2025

**CNR No.TNMD01-006220-2025**

---

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர், கூடக்கோவில் காவல் நிலைய குற்ற எண்.144/2024 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர் | : | 1. அழகுராஜா (26/2024)<br>த/பெ சந்தானம்<br>2. அருண் (27/2024)<br>த/பெ ராமன் |
| எதிரிகளின் மீது வனையப் பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1, 2 எதிரிகள் மீது 25(1A) of Arms Act-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப் பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1, 2 எதிரிகள் 25(1A) of Arms Act-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பும் தண்டனையும் | : | 1, 2 எதிரிகள் 25(1A) of Arms Act-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டு, BNSS பிரிவு 258(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப் படுகிறது. |

| | | |
|---|---|---|
| | | மேலும் எதிரிகள் வழங்கிய பிணைப் பத்திரங்களை ரத்து செய்து உத்திரவிடப் படுகிறது.<br>இவ்வழக்கில் இந்நீதிமன்ற R.P.R. No.2/26ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 பெரியவாள் ஒன்று (சுமார் 70 செ.மீ. நீளம்) சா.பொ.2 பெரியவாள் ஒன்று (சுமார் 79 செ.மீ. நீளம்) பயனற்றவை என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 07.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுதரப்பில், அரசுதரப்பு குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் திரு.J.ஜவஹர் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிரிகள் தரப்பில் திரு.B.சூரியநாதன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள்வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான தீர்ப்பு.

<u>வழக்கு சுருக்கம்</u>

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | இவ்வழக்கின் 1வது எதிரி அழகுராஜா 03.11.2024 முதல் 21.11.2024 வரை = 19 நாட்கள்.<br>இவ்வழக்கின் 2வது எதிரி அருண் 03.11.2024 முதல் 21.11.2024 வரை = 19 நாட்கள். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 25.11.2024 |
| 3. | முதல் நிலை பதிவேட்டு | 26.06.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| | விசாரணை முடிந்து மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | | | |
| 4. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 11.11.2025 | | |
| 5. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை | | |
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **சாட்சிகள்** | **மு.வி.** | **கு.வி.** |
| | | | | |
| | | அ.சா.1 | 05.01.2026 | 05.01.2026 |
| | | அ.சா.2 | 05.01.2026 | 05.01.2026 |
| | | அ.சா.3 | 16.03.2026 | 16.03.2026 |
| 7. | BNSS பிரிவு 351(1)(b)ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 25.03.2026 | | |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை | | |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை | | |

**தீர்ப்புரை**

2. அரசுத்தரப்பு வழக்கானது கடந்த 03.11.2024ம் தேதி 10.00 மணிக்கு வடக்கோவில் காவல் நிலைய சாாபு ஆய்வாளர் P.கார்த்திகா, போலீஸ் பார்ட்டிகளான தலைமை காவலர் 919 முருகன் மற்றும் தலைமைகாவலர் 159 ராஜபிரபு ஆகியோர்களுடன் குற்றதடுப்பு சம்பந்தமாக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, எலியார்பத்தி To நெடுமதுரை மந்தை அருகே செல்லும்போது, 1ம் எதிரி அழகுராஜா மற்றும் 2ம் எதிரி அருண் ஆகியோர்களை பிடித்து விசாரித்தபோது, 1ம் எதிரி அழகுராஜா என்பவருக்கு கூடக்கோவில் காவல்நிலையத்தில் அடிதடி வழக்குகள் இருப்பதாகவும், தன்னுடைய எதிரிகள் யாரும் தன்னை தாக்கி விடுவார்கள் என்ற பயத்திலும், அவர்களை தாக்கி விடவேண்டும் என்ற எண்ணத்தில் எவ்வித அரசு அனுமதியின்றி அரசால் தடைசெய்யப்பட்ட சுமார் 70 செ.மீ. நீளமுள்ள பெரிய வாளை முதுகில் மறைத்து வைத்திருந்ததாகவும், அழகுராஜாவுக்கு துணையாக 2ம் எதிரி அருண் அரசால் தடை செய்யப்பட்ட மற்றும் பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வையில் சுமார் 79 செ.மீ. நீளமுள்ள பெரிய வாளை தனது முதுகில் மறைத்து வைத்திருந்ததால், கூடக்கோவில் காவல் நிலைய ஆய்வாளர் 1 மற்றும் 2 எதிரிகள் 25(1A) of Arms Act –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் விளைவித்ததாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த வழக்கினை திருமங்கலம், நீதித்துறை நடுவர் அவர்கள் முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.84/2024 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்டு, இவ்வழக்கின் எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய

வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைக்கப் பட்டிருந்ததில் அந்த வழக்கு அமர்வு வழக்கு எண்.610/2025 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்டு பின் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை ஆராய்ந்து குற்றச்சாட்டு வனைந்து வினவ முதல்நிலை நோக்கு தென்பட்டதால் 11.11.2025ம் தேதி 1 மற்றும் 2 எதிரிகள் மீது 25(1A) of Arms Act–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரிகள் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டுகளை மறுத்ததின் பேரில் அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அரசுதரப்பில் மொத்தம் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணைங்களில் இருந்து புனலாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

கடந்த 03.11.2024ம் தேதி கூடக்கோவில் காவல் நிலையத்தில் பணியிலிருந்த சார்பு ஆய்வாளர் அ.சா.2 கார்த்திகா தலைமை காவலர் 919 அ.சா.1 திரு.முருகன் மற்றும் தலைமை காவலர் 158 சாட்சி எண்.1 ராஜபிரபு ஆகியோர்கள் குற்ற தடுப்பு சம்பந்தமாக எலியார்பத்தி மற்றும் நெடுமதுரை பகுதியில் ரோந்து பணியில் இருந்த போது, காலை 10.00 மணியளவில் நெடுமதுரை மந்தை பகுதியில் நின்று கொண்டிருந்த இரு நபர்கள் அவர்களை பார்த்ததும் ஓட முயற்சித்துள்ளார்கள் என்றும், அவர்களை சுற்றி வளைத்து விசாரிக்க, அவர்களின் பெயர் அழகுராஜா மற்றும் அருண் என சொல்லி,1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகள், தலைமை காவலர் அ.சா.1 முருகன், மற்றும் தலைமை காவலர் சாட்சி எண்.1 ராஜபிரபு ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.30 மணிக்கு பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1ம் எதிரியிடமிருந்து சா.பொ.1 பெரியவாள் (சுமார் 70 செ.மீ. நீளம்) அ.சா.ஆ.5 அத்தாட்சியிலும், மற்றும் 2ம் எதிரியிடமிருந்து சா.பொ.2 பெரிவாள் (சுமார் 79 செ.மீ.நீளம்) அ.சா.ஆ.6 அத்தாட்சியிலும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வழக்கின் 1ம் எதிரி அழகுராஜா மற்றும் 2ம் எதிரி அருண் ஆகியோர் தங்கள் முதுகு பின்னால் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றி அவர்கள் வைத்திருந்த

வாள் சட்டத்திற்கு முரணானது என்று எடுத்துக்கூறி காலை 10.15 மணியளவில் சார்பு ஆய்வாளர் எதிரிகளை கைது செய்து. விசாரித்து மற்றும் எதிரிகளை 12.15 மணியளவில் காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து, எதிரிகள் மீது கூடக்கோவில் காவல்நிலைய குற்ற எண்.144/2024 பிரிவு 25 (1A) Arms Act ன்படி அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை 03.11.2024ம் தேதி படிவம் 91 மூலம் நீதித்துறை நடுவர், திருமங்கலம் அவர்களுக்கு படிவம் 91 (2 எண்ணம்) அ.சா.ஆ.8 அனுப்பி வைத்துள்ளார். பின்பு வழக்கு கோப்பினை திருமங்கலம் வட்ட காவல் ஆய்வாளர் திருமதி.அனுசாமனோகரி அவர்களின் மேற்பார்வைக்கு வைத்துள்ளார். மேலும் காவல் ஆய்வாளர் அ.சா.3 திருமதி.அனுசா மனோகரி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, தலைமை காவலர் அ.சா.1 முருகன் மற்றும் தலைமை காவலர் சாட்சி எண்.1 ராஜபிரபு ஆகியோர்கள் மற்றும் சார்பு ஆய்வாளர் அ.சா.2 கார்த்திகா ஆகியோர்களை விசாரணை செய்து, தனி தனியே வாக்குமூலம் பதிவு செய்து மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 1, 2 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து, புலன் விசாரணையை முடித்து 16.11.2024ம் தேதி அன்று எதிரிகள் மீது பிரிவு 25 (1A) Arms Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். .

7. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b) படி

கேள்வி கேட்க எதிரிகள் பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றும் கூறினார்கள். ஆனால் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் 1 மற்றும் 2 எதிரிகள் மீது 25(1A) of Arms Act–ன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

9 . **பிரச்சனை** :

அரசு தரப்பு வழக்கானது கடந்த 03.11.2024ம் தேதி 10.00 மணிக்கு வடக்கோவில் காவல் நிலைய சாாபு ஆய்வாளர் P.கார்த்திகா, போலீஸ் பார்ட்டிகளான தலைமை காவலர் 919 முருகன் மற்றும் தலைமைகாவலர் 159 ராஜபிரபு ஆகியோர்களுடன் குற்றதடுப்பு சம்பந்தமாக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, எலியார்பத்தி To நெடுமதுரை மந்தை அருகே செல்லும்போது, 1ம் எதிரி அழகுராஜா மற்றும் 2ம் எதிரி அருண் ஆகியோர்களை பிடித்து விசாரித்தபோது, 1ம் எதிரி அழகுராஜா என்பவருக்கு கூடக்கோவில் காவல்நிலையத்தில் அடிதடி வழக்குகள் இருப்பதாகவும், தன்னுடைய எதிரிகள் யாரும் தன்னை தாக்கி விடுவார்கள் என்ற பயத்திலும், அவர்களை தாக்கி விடவேண்டும் என்ற எண்ணத்தில் எவ்வித அரசு அனுமதியின்றி அரசால் தடைசெய்யப்பட்ட சுமார் 70 செ.மீ. நீளமுள்ள பெரிய வாளை முதுகில் மறைத்து

வைத்திருந்ததாகவும், அழகுராஜாவுக்கு துணையாக 2ம் எதிரி அருண் அரசால் தடை செய்யப்பட்ட மற்றும் பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வையில் சுமார் 79 செ.மீ. நீளமுள்ள பெரிய வாளை தனது முதுகில் மறைத்து வைத்திருந்தார்கள் என்பதாகும்.

10. அரசு தரப்பு அறிவார்ந்த குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் இந்த வழக்கில் அ.சா.1 சார்பு ஆய்வாளர் கார்த்திகா தலைமையில் சாட்சி எண்.1 தலைமைகாவலர் 158 திரு.ராஜபிரபு மற்றும் அ.சா.1 தலைமைகாவலர் 919 திரு.முருகன் ஆகியோர் குற்றத்தடுப்பு சம்பந்தமாக **03.11.2024ம் தேதி 10.00 மணிக்கு** ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, 1ம் எதிரி தன்னுடைய எதிரிகள் தாக்க வந்தால் அவர்களை தாக்க வேண்டுமென்று அரசால் தடை செய்யப்பட்ட பெரிய வாளையும், அவருக்கு துணையாக 2ம் எதிரி அரசால் தடை செய்யப்பட்ட பெரிய வாளையும் வைத்திருந்தது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டு, முறையாக புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 1ம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, எதிரிகளிடமிருந்து அத்தாட்சியில் சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்டு, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

11. இந்த வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியானது மிகுந்த ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றும், ஆனால் தனிப்பட்ட

நபர்களை சாட்சிகளாக இந்த வழக்கில் முன்னிலைப்படுத்த போலீசாருக்கு வாய்ப்பு இருந்தும், அதைத் தவிர்த்துவிட்டு போலீசாரே ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் சாட்சிகளாக இருந்துள்ளது அரசு தரப்பு வழக்கின் அடிப்படையை பொறுத்த வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும், மேலும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டார்கள் என்பதைக் காட்ட, இந்த வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும், இந்நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்களை இந்த வழக்கு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

12. இரு தரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கானது அ.சா.2 சார்பு ஆய்வாளர் திருமதி.கார்த்திகா தலைமையில் சாட்சி எண்.1 தலைமைகாவலர் திரு.ராஜபிரபு மற்றும் அ.சா.1 தலைமைகாவலர் திரு.முருகன் ஆகியோர்கள் குற்ற தடுப்பு சம்மந்தமாக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது நெடுமந்தை அருகே செல்லும் போது 1வது எதிரி அழகுராஜாவினுடைய எதிரிகள் அவரை தாக்க வந்தால் அவர்களை தாக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு அனுமதியின்றி 1 மற்றும் 2 எதிரிகள் பெரிய வாளை முதுகில் மறைத்து வைத்திருந்தார்கள் என்பதாகும். இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தலைமைகாவலர் முருகன் தன்னுடைய குறுக்கு விசாரணையில்

நெடுமந்தை பகுதியானது ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான் என்றும், மந்தை பகுதியில் நிறைய கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே எதிரிகள் வாள் போன்ற ஆயுதங்களை மறைத்து வைத்துக்கொண்டு நின்றதாக சொல்லப்படும் பகுதியானது மிகவும் ஆள் நடமாட்டம் உள்ள பகுதி என்பது தெளிவாகிறது. ஆனால் இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தபடவில்லை என்பது மட்டுமின்றி தனிநபர்களை சாட்சியாக இருக்க அழைத்தும் வராத தனிநபர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்ததாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனவே தனிநபர்களை சாட்சியாக முன்னிலைப் படுத்துவதற்கு வாய்ப்பிருந்தும் போலீஸாரால் தவிர்க்கப்பட்டுள்ளது புலனாகிறது. இந்நிலையில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்துவதுபோல் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சான்றுபொருட்கள் அத்தாட்சியின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டதா? என்பதை பொறுத்தவரையில் சந்தேகத்தின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

13. மேலும் சாட்சி எண்.1 தலைமை காவலர் திரு.ராஜபிரபு அ.சா.1 தலைமை காவலர் திரு.முருகன் மற்றும் அ.சா.2 சார்பு ஆய்வாளர் கார்த்திகா ஆகியோர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டார்கள் என்பதனை காட்ட அரசு தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 சார்பு ஆய்வாளர் கார்த்திகா 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சம்பவ இடத்தில் வைத்து

லேப்டாப்பில் தட்டச்சு செய்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சிகள் கையால் எழுதப்பட்டுள்ளது. இந்நிலையில் அத்தாட்சிகளை யார் தயார் செய்தார் என்ற விபரம் அரசு தரப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே அரசு தரப்பில் முன்னிலைப்படுத்துவதுபோல் சம்பவ இடத்தில் வைத்து 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.2 சார்பு ஆய்வாளர் கார்த்திகா பதிவு செய்து, சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சிகள் தயார் செய்யப்பட்டு எதிரிகளிடமிருந்து வாள்கள் கைப்பற்றபட்டதா என்பதை பொறுத்த வரையில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

14. இந்நிலையில் காவல் ஆய்வாளர் அ.சா.3 அனுஷாமனோகரி அவர்கள் இந்த வழக்கில் எதிரிகள் கைது செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது சம்பந்தமாக சாட்சியமளித்திருந்தாலும் எதிரிகளை வழக்கு சம்பவத்துடன் இணைப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்த சாட்சியங்களும் இந்த வழக்கில் அமையாததால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்களை இந்த வழக்கு சம்பவம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, 1, 2 எதிரிகள் 25(1A) of Arms Act–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டு, BNSS பிரிவு 258(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் எதிரிகள் வழங்கிய பிணைப் பத்திரங்களை ரத்து செய்து உத்திரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் இந்நீதிமன்ற R.P.R. No.2/26ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 பெரியவாள் ஒன்று (சுமார் 70 செ.மீ. நீளம்) சா.பொ.2 பெரியவாள் ஒன்று (சுமார் 79 செ.மீ. நீளம்) பயனற்றவை என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.18 16:58:08 +0530

4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.முருகன், தலைமை காவலர், கூடக்கோவில் காவல் நிலையம் |
| அ.சா.2 | திருமதி.கார்த்திகா, சார்பு ஆய்வாளர், கூடக்கோவில் காவல் நிலையம் |
| அ.சா.3 | திருமதி.அனுஷாமனோகரி, ஆய்வாளர், கூடக்கோவில் காவல் நிலையம் |

TNMD010062202025



**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.11.2024 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 03.11.2024 | அத்தாட்சியிலுள்ள (11.30 மணி) அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 03.11.2024 | அத்தாட்சியிலுள்ள (11.45 மணி) அ.சா.1ன் கையொப்பம் |
| அ..சா.ஆ.4 | 03.11.2024 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.5 | 03.11.2024 | அத்தாட்சி (11.30 மணி) |
| அ.சா.ஆ.6 | 03.11.2024 | அத்தாட்சி (11.45 மணி) |
| அ.சா.ஆ.7 | 03.11.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 03.11.2024 | பாரம் 91 ( 2 எண்ணங்கள்) |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள் :-**

| | |
|---|---|
| சா.பொ.1 | பெரிய வாள் ஒன்று (சுமார் 70 செ.மீ. நீளம்) |
| சா.பொ.2 | பெரியவாள் ஒன்று (சுமார் 79 செ.மீ. நீளம்) |

**எதிரிதரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :** இல்லை

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.18 16:58:15 +0530

4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.